ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீமத் வரவரமுநயே நம:
ஸ்ரீவாநாசல மஹாமுநயே நம:

## அஷ்டதிக் கஜங்களைப் பற்றிய வாழித்திருநாமங்கள்

### 1. ஸ்ரீமத் வானமாமலை ஜீயர் வாழித் திருநாமம்

திருவிருந்த மலர்த்தாள்கள் வாழியே
சிறந்த செந்துவராடையும் வாழியே
தருவிருந்தகை முக்கோலும் வாழியே
தடம்புயத்தினில் சங்காழி வாழியே
மருவு கொண்டல் மணவாள யோகியை
வாழ்த்தி வாய்ந்தருள் வாய்மலர் வாழியே
கருணைமேவு மிராமாநுசமுனி
கனகமௌலி கலந்தூழி வாழியே

அடியவர் தந்துயரனைத்தும் அறுத்தருள்வோன் வாழியே
அணிபொழில் சிரீவர மங்கை அவதரித்தோன் வாழியே
கடிபொழில் சூழ்புதூர் மன்கழல் பணிந்தோன் வாழியே
கருத்தையடர் புலன்களைந்தும் கடிந்து விட்டோன் வாழியே
வடமொழி தென்மொழி மறைகள் வகுத்துரைப்போன் வாழியே
மணவாள மாமுனியை வாழ்த்துமவன் வாழியே
இடருத்தி முழுகுமெனையெடுத்த தளிப்போன் வாழியே
என்னப்பன் இராமாநுச முனிவன் வாழியே

### 2. ஸ்ரீமத் பரவஸ்து பட்டர்பிரான் ஜீயர் வாழித் திருநாமம்

இன்னுலகிற்கச்சிதனில் வந்துதித்தோன் வாழியே
எழில் கார்த்திப் புனர்பூசத்திங்குற்றான் வாழியே

மன்னுமறைத் தண்டமிழை மகிழ்ந்துரைத்தோன் வாழியே
மணவாளயோகி மலர்த்தாள் பணிவோன் வாழியே
பன்னுசிச்சனுட்டான மறிவித்தோன் வாழியே
பாரிலட்டதிக்கயத்தில் பேர்பெற்றான் வாழியே
சொன்னநெறி மதுரகவிபோலுமவன் வாழியே
தூய்மைமிகு பட்டர்பிரான் துணையடிகள் வாழியே

## 3. கோயிற் கந்தாடையண்ணன் வாழித்திருநாமம்

வாழிமணவாள மாமுனிவன் மாதகவால்
வாழும் வரதநாராயணனார் - வாழியவன்
அந்தமில்சீர் ஆழ்வார்கள் தாமருளிச் செய்துவளர்
செந்தமிழை சேர்ந்துரைக்கும் சீர்.
தேனமருமலர்முளரித் திருத்தாள்கள் வாழியே
திருச்சேலையிடை வாழி திருநாபிவாழியே
தானமரு மலர்க்கண்கள் தனியுதரம் மார்பம்
தங்கு தொங்குமப வீதம் தடந்தோள்கள் வாழியே
மானபரன் மணவாள மாமுனிசீர்பேசும்
மலர்ப்பவள வாய்வாழி மணிமுறுவல் வாழியே
ஆனனமுந்திருநாம மணிநுதலும் வாழியே
அருள்வடிவன் கந்தாடையண்ணனென்றும் வாழியே

## 4. ப்ரதிவாதிபயங்கரம் அண்ணா வாழித் திருநாமம்

மன்னு புகழ் மணவாள முனிக்கன்பன் வாழியே
மாறன் சடகோபன் மொழி வழுவாதான் வாழியே
அன்னையிலுமடைந்தவர் பாலஅருளுடையோன் வாழியே
அடைவுடனே வேதாந்தமறிந்துரைத்தோன் வாழியே
என்னையும் தன் இன்னரு ளாலெடுத்தளித்தோன் வாழியே
இரண்டுலகும் தன் புகழையேத்துமவன் வாழியே
பன்னுகலையாழ்வார்கள் பதமுடையோன் வாழியே
பரவாதி பயங்கரமண்ணன் படியிலென்றும் வாழியே

## 5. எறும்பியப்பா வாழித் திருநாமம்

சந்ததமும் வரவரமுனிதாள் தொழுவோன் வாழியே
தாரணியில் எறும்பிநகர் தழைக்க வந்தோன் வாழியே
அந்தமுடன் தினசரியை அருளினான் வாழியே
ஐப்பசியில் ரேவதிநாள் அவதரித்தோன் வாழியே
மந்தமதியற்கெல்லாம் வாழ்வளித்தான் வாழியே
வரவரமுனி சதகம் வாய்ந்துரைப்போன் வாழியே
செந்தமிழும் வடகலையும் தேசுடையோன் வாழியே
தேவராஜாசாரியன் திருவடிகள் வாழியே

Azhvar emperumAnAr Jeeyar thiruvadigalE sharaNam
Jeeyar thiruvadigalE sharaNam